ஞாயிறு வெளியீடு. விலை 0—1—3. REGD. NO. M. 4642

# திராவிடநாடு

மலர் 3. | 3-12-44 | இதழ் 37.

## பீகாரில் பாகிஸ்தான்!

பலப்பல நூற்றாண்டுகளுகளாக ஒன்றாகவாழ்ந்தவர்கள்! ஒரு குடும்பத்துமக்கள்!! மதத்திலே வேறுபட்டு விட்டதனாலேயே, அரசு வேறாகிவிட வேண்டுமா? மதமாற்றம் மனமாற்றமாகவும் இனமாற்றமாகவும் ஆகிவிடுவதா? இன்றைய இஸ்லாமியர்கள், முன்னாள் இந்துக்களன்றோ! இவர்கள் இனஅரசு கேட்பது நீதியா?— என்று உருக்கமாகப் பேசுகின்றனர், ஆளுவதிலே ஏகபோக உரிமைகோரும் தந்திரக்காரர்கள். பத்துக்கோடி முஸ்லீம்கள், தமக்கு ஒருதனி அரசு கேட்பது இவர்களுககு விசித்திரமானதாகவும் விபரீதவிளைவுகள் தரக்கூடியதாகவும் காணப்படுகிறது! பாகிஸ்தான் கோரிக்கையையும் திராவிடஸ்தான் கிளர்ச்சியையும் பரிகசிக்கின்றனர்: ஆனால், காலப்போக்கு எதனைக்காட்டுகிறது? ஒரு இனம் மற்றோர் இனத்தினிடம் கட்டுப்பட்டு, அடிமைப்பட்டு இருக்க மறுக்கிறது. ஒருவகுப்பு மற்றோர் வகுப்பின் ஆதிக்கத்திலே இருக்க இசைவதில்லை. அதுமட்டுமல்ல, ஒரு பிரதேசம், மற்றப்பிரதேசங்களின் பிடியில் இருக்க மறுக்கிறது. ஆதிக்கத்தைப் பொதுவாகவே எவரும் எங்கும் எக்காரணம் கொண்டும் ஏற்க முடியாதென்று காலப்போக்குக்கூறுகிறது. உரிமைவேட்கையின் விளைவு இது. அறிவும் அத்துடன் ஆண்மையும் வளர வளர, ஒவ்வொரு வட்டாரமும் தத்தமது தனி உரிமையைப்பெற்றுவாழவே முயலும். இராணுவ பலத்தைக்கொண்டு பல வட்டாரங்களை உருக்கி ஒன்றாகவார்த்து, இராஜதந்திரமெனும்சம்மட்டிகொண்டுஅடித்து ஒரு அமைப்பாக மாற்றப் பார்த்தனர். ஐரோப்பாக்கண்டத்தில், பலிக்கவில்லை. ஐரோப்பாவிலே பலப்பல தனி அரசுகள் தோன்றிவிட்டன. இந்தியா எனும் உபகண்டத்திலும் இந்த நிலை வந்தேதீரும். இல்லையேல் இனப்பகையும், வட்டாரத்துக்கு வட்டாரம் விரோதமும், வளர்ந்தபடியே இருக்கும். காட்டுக்குருவிகள் போல, விளைச்சலுள்ள வயல்தேடிடும் பேர்வழிகளுக்கு, இந்தியா ஒரே தேசமாக இருக்கவேண்டு மென்பதிலே அக்கறை இருக்கிறது, காரணம் தங்கள்வேட்டைக்காடு விசாலமானதாக இருப்பதிலே அவர்களுக்குஇலாபம் இருக்கிறது! ஆனால் இடுக்கியிலே சிக்கியுள்ள இனங்கள், தத்தமது உரிமையைப் பெறத்தனி அரசு அமைத்துக்கொள்வதையேவிடுதலைமார்க்கமாகக்கொண்டு தீரும். இந்த நீதியை, நாட்டைத்துண்டாடும் சதியென்று சாகசம் பேசுகின்றனர். இஸ்லாமியரும் திராவிடரும் இந்து இனத்திலிருந்து வாழ்க்கைமுறையிலே பெரிதும் மாறுபட்டுள்ளனர். வேறுபாடுகள் மட்டுமல்ல; முரண்பாடுகளே உள்ளன. முரண்பாடுகள் மூடிவைக்கப்படவுமில்லை. மோதுதல் நடந்தவண்ணம் இருக்கிறது. இதைமறைத்துப் பயனில்லை தனித்தனி கலாசாரத்துடன் உள்ள இனங்களுக்குத் தனி அரசுகள் தேவைஎன்ற நீதியை மறுப்பவர்க்கு ஒரு செய்தி. பீகார், இந்தியாஎனும் அமைப்பிலே இன்று ஒரு மாகாணம். அந்தமாகாணத்திலே ஒருபகுதி, சோட்டா நாகபுரி. இனவேறுபாடு இல்லை. மதவேறுபாடு இல்லை, குறிப்பிடத்தகுந்த அளவிலே. ஆனால், சோட்டாநாகபுரி, பீகாரிலிருந்து விடுபட்டுத்தனி வட்டாரமாக, தனிமாகாணமாக வாழவேண்டுமென்று விரும்புகிறது. பீகாருடன் இணைந்து இருப்பதால் தங்கள் நலன் கெட்டுவிடுவதாகச் சோட்டா நாகபுரியினர் கருதுகின்றனர். சோட்டா நாகபுரி தனிமாகாணமாக்கப்பட்டால், தமது நலன்கள் பெருகும் என்று அந்த வட்டாரமக்கள் எண்ணுகின்றனர். எண்ணத்தோடு அவர்கள் நின்றுவிடவில்லை, எடுத்துரைத்துவிடுவதோடு திருப்திபெறவுமில்லை, சோட்டாநாகபுரி தனிமாகாணமாக்கப்படவேண்டுமென்பதற்கான திட்டம்வகுத்து வேலைசெய்ய ஒரு அமைப்பும் ஏற்படுத்தியுள்ளனர். தோழர் தேவகி பிரசாத்சின்ஹா என்பவர் தலைமையில் இத்திங்கள் 19ந் தேதி இதற்காக ஒரு பொதுக்கூட்டம், ராஞ்சி நகரிலே கூடியது. சோட்டா நாகபுரி பிரிவினைக்கமிட்டி நிறுவப்பட்டது. சோட்டா நாகபுரிதனிமாகாணமாக்கப்பட வேண்டுமென்றும், அதற்குள் உடனடியாக, சோட்டா நாகபுரிக்கு ஒரு உதவிக் கவர்னரும், ஆலோசனை சபையும் நியமிக்கப்படவேண்டுமென்றும். ராஞ்சியைத் தலைநகராகக் கொள்ளவேண்டுமென்றும், பிரிவினைக்கமிட்டி தீர்மானங்கள் நிறைவேற்றி, ஒரு அணா சந்தாவுடன் அங்கத்தினர்களைச் சேர்த்து, வேலைக் கமிட்டியும் அமைத்துள்ளனர்.

சோட்டா நாகபுரியினர் கேட்பது தனிமாகாணமே தவிர, தனி அரசு அல்ல! என்றுவாதிடுவர் என்பதையாமறிவோம். தனி அரசுக்கும் தனிமாகாண அமைப்புக்கும்உள்ள வேறுபாடுகளை நாம மறந்தோமில்லை. ஆனால்,இந்தப் பிரிவினைக்கிளர்ச்சி தனி அமைப்புக்கோரும் நிலைமை, காலவேகத்தின் குறி என்பதை யாரும் மறுக்கமாட்டார்கள், யூகத்துடன் ஒத்துழையாமை நடத்துபவர்கள் தவிர, ஒரு மாகாணத்துக்குள்ளாகவே, இனப்பகையோ, மதமாச்சாரியமோ, இல்லாதபோதே, ஒரு வட்டார மக்கள், எங்களைத் தனி அமைப்பிலே இருக்கச்செய்யுங்கள், பீகாருடன் பிணைந்து இருக்கமாட்டோம், என்று கேட்கின்றனர். பீகாருக்குள் ஒரு பாகிஸ்தான் தேவைப்படுகிறது, கேட்கப்படுகிறது, காரணம் மதமல்ல, இனமல்ல,

(4ம் பக்கம் பார்க்க).

## துரைமகனார் தூபம்!

8-ம் பக்கத் தொடர்ச்சி.

பாதுகாப்புப் பிரச்னையைப் பற்றியும், திராவிட நாடு அமைப்பாளர்கள் எதும் கவனியாமலோ, இதுவரை கூறாமலோ இல்லை! பெரியார் மெயிலுக்கு அளித்த பதிலிலேயே, திராவிட நாடு தற்பாது காப்புக்காக மட்டுமல்ல, இந்திய உபகண்டத்துப் பாதுகாப்புக்கு ஒரு அமைப்பு ஏற்பட்டால் அந்த அமைப்புக்கும் தன் பங்கு செலுத்தத் தயங்காது என்று கூறியிருக்கிறார். உலகிலே இன்றுள்ள கொந்தளிப்பு அடங்கிய பிறகு எவ்வண்ணம், அமெரிக்கா, ரஷியா, பிரிட்டன், எனும் மூவர், ஐரோப்பிய நிலைமையைக்கவனித்துக் கொள்ளும் பணியை மேற்கொள்ள மற்ற நாடுகளையும் சேர்த்து ஒரு சர்வதேச சங்கம் அமைத்துக்கொள்ளவேண்டுமென்று, சக்தியுள்ள சங்கம் அமைத்துக் கொள்ள வேண்டுமென்று, நிபுணர்கள் பேசுகின்றனரோ, அதுபோலவே, இரண்டோர் சங்கங்கள் இப் பகுதிகளிலே ஏற்படும். திராவிட நாடு அத்தகைய அமைப்பிலே முக்யத்வம் வாய்ந்ததாக இருக்க முடியும். தென் கிழக்கு ஆசியப் பகுதியிலே, திராவிட நாடு, ஒருவல்லமையுள்ள அரசாக இருக்கப் பலவகையிலும், பக்குவமும் வசதியும் உடையது என்பதை எந்த ராணுவ நிபுணரும் அறிவார். மவுன்ட்பேடன் பிரபுவின் தலைமையிலே இன்றுள்ள தென்கிழக்கு ஆசியக் கள அமைப்பு எதிர்காலம் எப்படி அமையும் என்பதற்கோர் அறிகுறி என்றுகூறலாம். இன்று தேயிலைத் தோட்டத்திலும் ரப்பர் காட்டிலும் வாடிடும் தோழர்கள், இன்று பாலை வனத்திலும் பாசிச நாட்டிலும் பிரிட்டிஷாரின் பக்க நின்று போரிடும் தோழர்கள், திராவிட நாட்டினைப் பாதுகாத்துக் கொள்ளும் படையினராக முடியாதா என்றுகேட்கிறோம்! பாதுகாப்புப் பற்றிய பிரச்னையைத் திராவிட நாடு நிச்சயமாகக் கவனிக்கும், அதற்குரிய நிலைமை உண்டாகும்போது. எனவே, அப்பிரச்னைகளை இவர்கள் அறியார் என்று எண்ணம் செய்வது கோமாளியின் செயல்! மெயில் ஆசிரியருக்குக் கூடாது இந்த போக்கு. அதை அவர், தினசரிகளுக்கும் தினமணி மித்திரன் தேவி கூட்டத்தினருக்கும் விட்டுவிடலாம்!

"கேலியால் இந்தப் பிரசாரத்தைத் தடுத்துவிட முடியாது. அவர்கள், மக்கள் மனதிலே எழுச்சி யூட்டுகிறார்கள், அந்த எழுச்சியை எளனத்தினால் ஒழித்துவிட முடியாது" என்று, நம்மை எதிர்க்கும் தோழர்களுக்கு மெயில்ஆசிரியர்யோசனை கூறுகிறார். எலி வளை எலிகளுக்கே என்று எளனம் பேசிய காலம் மாறிவிட்டது. இன எழுச்சியின் வாடை வீச ஆரம்பித்துவிட்டது. இது ஆரியருக்கு நிச்சயம் தெரியும், என்ற போதிலும் எந்த ஆங்கிலேயரை மலைபோல அவர்கள் நம்பிக்கொண்டிருக்கிறார்களோ, அதே ஆங்கிலேயரே, ஆரியருக்கு, நாட்டு நிலைமையைக் கூறி விடுவது நல்லதுதான் என்ற யோசனை கூறுகிறார் மெயில் ஆசிரியர்? ஜாதி பேதத்தை ஒழிக்க முன் வாருங்கள்! அனைவரும் சமம் என்று சொல்லுங்கள். அரசியல், சமுதாயம், பொருளாதாரம் ஆகிய சகல துறைகளிலும் சகல வகுப்பினருக்கும் சமசந்தர்ப்பம் கொடுங்கள். ஆதித் திராவிடருக்கு உயர் வகுப்பினருக்கு என்ன உரிமை இருக்கிறதோ அதனைத் தாருங்கள். எவ்வளவு சாமான்யனாக இருந்தாலும் அவன் இருதயத்திலே, அதிருப்தி எனும் அழல் கிளப்ப விடாதீர்கள். எல்லாவற்றையும் விட அறிவுத் துறையிலே வசதி பெற்றுள்ள கூட்டம் எல்லாப் பதவியும் தங்கள் வகுப்புக்கே கிடைக்கவேண்டும்என்ற எண்ணத்தை ஒழித்துவிடுங்கள்!"—என்று மெயில் ஆசிரியர் உபதேசம் செய்கிறார், பூதேவர்கட்கு!!

"அடபாவிகளே! இது என்னமோ ஒரு காட்டுக் கூச்சல், கேட்பாரற்றுப் போய்விடும் என்று நாம் நம்பிக்கொண்டல்லவா இருந்தோம். வெறும் கேலியினாலேயே திராவிடரின் உரிமை முழக்கத்தை ஒழித்துவிடலாம் என்று கூறினாயே. பார்த்தாயா இப்போது? நமது முறை பலிக்கவில்லை! பல்லாயிரக் கணக்கானவர் உள்ளத்திலே, திராவிட நாடு திராவிடருக்கே" என்ற எண்ணம் எழுச்சியை உண்டாக்கிவிட்டது, இனி அதனை கேலியினால் அடக்க முடியாது. என்ன செய்வது? எல்லாம் உங்களால் வந்த தொல்லைதான். நீங்கள் ஜாதி அகம்பாவம் பிடித்துச் சகல வகுப்பினர்மனதும் புண்படச் செய்தீர்கள். ஆதித்திராவிடரை, மனிதர்கள் என்றுகூட மதிக்க மறுத்தீர்கள். கிடைத்த அதிகாரத்தை எல்லாம் பிடித்துக்கொண்டு, யாரையும் அருகே சேர்க்காமல் துரத்தி அடித்தீர்கள். அரசியலிலும் பொருள் இயலிலும் சமுதாய இயலிலும் நீங்கள் செய்த அட்டகாசம் கொஞ்சமா? உங்களால் வந்தவினைதான் இது. ஆகவே, உங்கள் சுபாவத்தை மாற்றிக்கொள்ளுங்கள், அந்தச் சூறவளிக்குத் தப்ப வேறு வழியில்லை". என்று ஆரியத்தை நோக்கி ஆங்கிலம் பேசுகிறது. மெயில் ஆசிரியர், இந்தத் தாதுவாகக் காட்சியளிக்கிறார், நமது மனக் கண் முன்பு!

சேஷ்டை செய்யாதிருக்கும்படி குரங்குக்கும், திருட்டுச் சுபாவத்தை விட்டு விடும்படி பூனைக்கும், உபதேசம் செய்து மெயில் ஆசிரியர் வெற்றி பெற்றவராக இருந்தாலொழிய, ஆரியத்துக்கு அறிவுரை புகன்று வெற்றிபெற முடியாது! செய்து பார்க்கட்டும்!!

துரைமகனார் ஆந்திரரை நோக்கித் தூபம் போட்டிருக்கிறார், ஆரியருக்குத் தூபம் போடுகிறார், முன்னவர்களை உரிமைக்காகப் போரிடுங்கள் என்றும், ஆரியரைச் சுபாவத்தை மாற்றிக்கொள்ளும் படியும்! ஆந்திரரின் உரிமையைமறுக்கும் நோக்கம், திராவிட நாடு அமைப்பாளருக்குக் கிடையாது, ஆரியர் தமது சுபாவத்தை மாற்றிக் கொள்வார்கள் என்ற நம்பிக்கையும் இல்லை!

---

# அக்மத் அறவுரை

இந்தியா விடுதலைபெறாமல் இருப்பதற்குக் காரணம்என்ன? என்பதுபற்றி, அமெரிக்காவிலே ரேடியோவில் சொற்பொழிவுகள்நடந்தன, சென்றகிழமை. அதுபோது ஜனாப் S. M. அஹமத் "இந்துக்களால்நடத்தப்படும் காங்கிரஸ்கட்சி, சகிக்கமுடியாத அளவு முஸ்லீம்களிடமும் இதரமைனாரிடிகளிடமும், விரோத உணர்ச்சிகாட்டுகிறவரையில், இந்தியா பிளவுபட்டும் அடிமைப்பட்டும்இருந்து தீரும். இந்துப் பார்ப்பனர்களும் உயர் ஜாதியினரும், பிரிட்டிஷாரின் உதவியைக்கொண்டு, இந்திய விடுதலைஅடைவதைத்தடுத்துவருகிறார்கள் என்று நான் தைரியமாகக்கூறுவேன்" என்றுபேசினார்.

நாட்டு நலிவுக்கும்ஒற்றுமைக்குறைவுக்கும் காரணம், உயர்ஜாதிஎன்றுகூறிக்கொண்டு, பேதத்தையும் பிளவையும் உண்டாக்கி, மக்கள்மனதிலே அடிமையுணர்ச்சியைப்பதியவைக்கும், பார்ப்பனீயமே என்று பலமுறை நாம்கூறி வந்திருக்கிறோம். பார்ப்பனரின் போக்கை பிரிட்டிஷ் ஆட்சியினர், பார்த்துக்கொண்டும், சிறுவிரலையும் அசைக்காமல், மகாராணியார்கொடுத்த வாக்குறுதிப்படி, மதசம்பந்தமான விஷயத்திலே, தாங்கள் தலையிடமுடியாது என்றுகூறிவிட்டது, கேடுகளைவளரச் செய்தது, ஆரிய—ஆங்கிலேய ஆலிங்கனத்தினால், நாடு நாசமாகிறது என்று கூறினோம். இக்கருத்தைத் தைரியமாக அமெரிக்காவிலே, ஜனாப் S. M. அஹமத் எடுத்துரைத்தார், அவரைத்திராவிடரனைவரும் பாராட்டக்கடமைப்பட்டவர்கள். ஒரு அஹமத் அமெரிக்காவில் இந்த அரும்பணியாற்றினார், நமது அகங்குளிர. நம்மவர்கள், நமது தலைவர்களும் சென்றார்கள் அமெரிக்கா, இங்கிலாந்துமுதலிய இடங்களுக்கு! போனார்கள், புகழோடு திரும்பினார்கள்! ஆனால் தங்கள் இனத்தின் இலட்சியத்தைப்பற்றியோ, இனம் இடர்ப்படுவதுகுறித்தோ, பேசினதுண்டா? இல்லை!! ஏன்? நாமறியோம்!

---

### கோகலே மண்டபத்தில் திராவிடர் முழக்கம்.

2?-ந் தேதி மாலை கோகலே மண்டபத்தில், பார்க் டவுன், திராவிடர் கழகத் திறப்பு விழாவைத் தோழர் சத்யவாணி முத்து அம்மையார் நடத்திவைத்தார். பெரியார் தலைமை வகித்தார். தோழர் அண்ணாதுரை தற்கால நிலை எனும் பொருள்பற்றிப் பேசினார், தோழர் ஜனார்த்தனம் வணக்கங்கூறினர்.

# இடமாற்றம்

"திராவிட நாடு" நிலயம் 1-12-44 முதல் கீழ்க்குறிப்பிடும் இடத்திற்கு மாற்றப்பட்டிருக்கிறது. "திராவிட நாடு" சம்பந்தமான கடிதங்கள், மணிஆர்டர்கள் எல்லாம் இன்று முதல் கீழ்க்குறிப்பிடும் முகவரிக்கே அனுப்பப்பட வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மானேஜர்

"திராவிட நாடு" நிலயம்

317-319, ஆடிசன்பேட்டை

காஞ்சிபுரம்.

"DRAVIDANADU" OFFICE.
317–319, Hodgsonpet,
Conjeeveram.

திராவிட நாடு.

காஞ்சி 3—12—44 ஞாயிறு

# இதிலென்ன தவறு?

ஆரியர்களால் வடமொழியில்எழுதப்பட்ட நூல்களெல்லாம்நூற்றுக்கு நூறும் அவர்களுடைய ஆதிக்கத்தை எல்லாத் துறைகளிலும் உயர்த்தவும், ஆரியரல்லாதாரைத் தாழ்த்தி அடிமைப்படுத்தவுமே எழுதப்பட்டதென்பதை, நாம் பலகாலமாகப் பேசியும் எழுதியும் வந்திருக்கிறோம். நாம் மட்டுமல்ல. மேல் நாட்டு பேரறிஞர்களான கால்ட்வெல், இ. ஜெ ராபின்ஸன், சார்லஸ். இ. கவர், ஆகியவர்கள் இந்தியாவைப் பற்றி ஆங்கிலத்தில்எழுதிய நூல்களில்எல்லாம்இவ்வுண்மைகளை நன்கு தெளிவுபடுத்தியுமிருக்கின்றனர் என்பதை ஆராய்ச்சிஉலகம் நன்கு அறியும்.

நம் நாட்டில் ஒரு சாதியினர் உழைப்பற்ற உயர்ந்தவாழ்வில் இருக்கவும், மற்றச் சாதியினர் உழைத்தும் உண்ணஉணவின்றி ஊசலாடவும் காரணமாக இருப்பவை ஆரியர்களால் எழுதப்பட்ட நூல்களே என்பதையும் நாம் பன்முறை எடுத்துக்காட்டியிருக்கிறோம். இந்தஉண்மையையே டாக்டர் அம்பேத்கார் அவர்களும் அண்மையில் எடுத்துக்காட்டியுள்ளார். ஆரிய வேதங்களும் கீதையுமே நம்மவர்களுடைய முன்னேற்றத்திற்கு பெரும் தடைக்கற்களாக உள்ளன வென்பதைத் தெளிவாக விளக்கியுள்ளார். இந்நூல்கள் தாழ்த்தப்பட்ட மக்களை அளவு கடந்த முறையில் தாக்கியிருக்கின்றனவென்பதை அறிவுறுத்தியதோடு இங்ஙனம் ஒரு சாராரை உயர்த்தியும்இன்னொருசாராரைத் தாழ்த்தியும் எழுதப்படும் நூல்கள் எந்த வகையிலும் தெய்வீகம் பொருந்தியதாக இருக்கமுடியாதென்று டாக்டர் அம்பேத்கார் கூறுவதில் என்ன தவறு இருக்கமுடியும்.

ஆரியர்களால் எழுதப்பட்டஒவ்வொரு நூலும் அரசியல் ஆதிக்கத்தைப்பெற்று, அதன் வாயிலாகப் பொருளாதாரத் துறையில் சிறந்து விளங்குவதற்கே எழுதப்பட்டனவென்பது அந்நூல்களில் வரும் சுலோகங்களால் தெரியக்கிடக்கின்றனவென்பதும், வேதங்களின்வழி நூலாகப்பின்னர் எழுதப்பட்ட கீதையும் அரசியல் ஆதிக்கத்தைப் பெறுவதற்காகவும், வேதங்களுக்கு உயர்வு கற்பிக்கவும், பார்ப்பனியத்தை உயர்ந்த நிலைக்குக் கொண்டு வரவுமே எழுதப்பட்டதென்று டாக்டர் கூறுவதில் என்ன தவறு இருக்க முடியும்.

வேதங்களில் நூற்றுக்கணக்கானசுலோகங்கள் திராவிடர்களை அழித்துத், தங்களை உயர்ந்த நிலைக்குக் கொண்டுவர வேண்டுமென்று ஆரியர்கள் இந்திரனை நோக்கி வேண்டிக்கொள்ளும் பாடல்களாகவே உள்ளன. இந்த உண்மைகள் வேதங்கள் மறைகளாக, அதாவது மறைபொருளாக, இன்னம் விளக்கமாகச் சொல்லவேண்டுமானால் வேதங்களில் உள்ள உண்மைகளை வேறு மொழிகளில் மொழி பெயர்க்கப்படாமலிருந்த வரையில், அவைகளுள் என்னென்ன கூறப்பட்டுள்ளன என்பது பிறருக்குத் தெரியாதிருந்தது. அவை பல மொழிகளில் மொழி பெயர்க்கும் வாய்ப்புக்கிடைத்த பின்னர்—அவை எதற்காகஎழுதப்பட்டதென்பதைத் தெரிந்தபின்னர், டாக்டர் அம்பேத்கார் மட்டுமல்ல, அவ்வேதப் பொருட்களால் அடிமைப்பட்டு அல்லற்படும் ஒவ்வொருவரும் அவற்றைத்தங்கள் நூலாக ஒருபோதும் ஒப்புக்கொள்ளவே மாட்டார்கள் என்பதை நாம் வலியுறுத்திக்கூறுகிறோம்.

---

# "திராவிட நாடு"

"திராவிட நாடு" நிலயத்தைப் புதிய இடத்திற்கு மாற்றுவதில் விடா மழை காரணமாக ஏற்பட்ட தாமதத்தால், இவ்வார இதழ் 8 பக்கங்களுடன் வெளியிட நேர்ந்ததை அன்பர்கள் பொறுத்துக் கொள்ளும்படி கேட்டுக் கொள்வதோடு, அடுத்த வாரம் முதல் வழக்கப்படி 12 பக்கங்களுடன் வெளிவரும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

---

## புதிய மேயரின் அலுவல்.

சென்னைக் கார்ப்பரேஷனுக்கு மேயராகத் தெரிந்தெடுக்கப்பட்ட தோழர் M. ராதாகிருஷ்ணப் பிள்ளை, கல்கத்தாவில் நடைபெற இருக்கும் மேயர்கள் மாநாட்டிலே கலந்துகொள்ளச் சென்றிருக்கிறார்.

# "தொழிலாளர் மித்திரன்"

புதுச்சேரியிலிருந்து, "தொழிலாளர் மித்திரன்" என்ற பெயருடன், மாதம் இருமுறைப் பத்திரிகை யொன்று, தோழர் காஞ்சி. கலியாணசுந்தரன் அவர்களை ஆசிரியராகக்கொண்டு வெளிவரும் மகிழ்ச்சியான செய்தியைத் தமிழருக்குத் தருகிறோம். கொடுமை—எங்கு காணப்படினும் — ஒழிபடவேண்டும், நீதி நிலைநாட்டப்படவேண்டும், என்ற கொள்கையிலே பற்றும், அத்துறையிலே பணியாற்றிப் பயிற்சியும் பெற்ற தோழர் கலியாணசுந்தரன் அவர்களின் தொண்டு தமிழகத்துக்கு இப்பத்திரிகை மூலம் கிடைப்பதறிந்து களிக்கிறோம். தொழிலாளரும், சிறப்பாகத் தமிழரும் இதனை ஆதரித்துப் பயன் பெறுமாறு வேண்டுகிறோம். டிம்மி அளவில் 8-பக்கங்களுடன், அரிய விஷயங்களுடன் வெளிவரும் இப் பத்திரிகையின் விலை ஒரு அணாதான். வேண்டுவோர்,தொழிலாளர் மித்திரன் நிலயம் புதுவை என்ற முகவரிக்கு எழுதவும்.

---

## வட சென்னை
## திராவிடர் கழகத் திறப்பு விழா

மேற்படி விழா 19-ந் தேதி காலை, ராயபுரத்தில், தோழர் T. சண்முகம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தோழர் N. ஜீவரத்தினம், தலைவர்களை வரவேற்றுப் பேசினார். பெரியார், கழகத்தைத் திறந்துவைத்துத் திராவிடரின் இலட்சியத்தைப்பற்றி விரிவுரையாற்றினார். அதைத் தொடர்ந்து, தோழர்கள் அன்பழகன், ஜனார்த்தனம், வீரமணி, திராவிடமணி, C. N. அண்ணாதுரை ஆகியோர் பேசினர்.

---

## காந்தி முனிவர்!

"காந்தியார் முனிவராகவுமிருக்கிறார்., அரசியல் வாதியாகவுமிருக்கிறார் என்றுதான் இந்தியா சொல்லும். அவரை அரசியல்வாதி என்று சொல்வதைவிட முனிவர் என்று சொல்லலாம் என்றே அவருக்கு மிக்க அருகிலுள்ளவர்கள் சொல்வார்கள். நானும் இதே கருத்தைத்தான் ஒப்புக்கொள்ளுகிறேன்"—என்று டாக்டர் ஹாட்ஜ் "இந்தியாவுக்கு நன்றி" என்ற தலைப்புடன் தாம் எழுதிய புத்தகத்திலே குறிப்பிட்டிருக்கிறார். இப்புத்தகம் சின்னாட்களுக்குமுன்பு லண்டனில் வெளியிடப்பட்டது. சென்றகிழமை, காந்தியாரை, மேனாட்டினர் என் மகாத்மாவாக்குகிறார்கள் என்பதை விளக்கியிருந்தோம். அதனை வாசகர்களுக்கு நினைவூட்டுகிறோம்.

---

## பீகாரில் பாகிஸ்தான்!

1-ம் பக்கத் தொடர்ச்சி.

காரணம் என்ன? சோட்டா நாகபுரி பீகாருடன் பிணைந்து, தன்மதிப்பை இழந்துவிடுவதாக நம்புகிறது. அது மட்டுமா? பீகாருடன், இணைந்திருப்பதால், பொருளாதாரத் துறையிலே, பீகாரின் மற்றப் பகுதிக்கு செக்குமாடாகத்தான் வாடவேண்டியிருப்பதாகக் கருதுகிறது. உழைப்பும் வளமும், பீகாரின் மற்றப் பகுதிக்கு இறைக்கப்பட்டு, சோட்டா நாகபுரி சோர்வடைந்துவிடுவதாக, அந்த வட்டாரமக்கள் எண்ணுகின்றனர், இந்தியாவைத் தாய்நாடாகக் கருதக்கூடாதா, இதிலே வட்டாரத்துக்கு வட்டாரம், வர்க்கத்துக்கு வர்க்கம், போட்டியும் பூசலும், பொறாமையும் ஏன் எழவேண்டுமென்று, கூறுகின்றனர் காங்கிரஸ்காரர்கள். அவர்களைக்கேட்கிறோம், பீகாரின் மற்ற ப்பகுதிகளின் நலனுக்காக சோட்டா நாகபுரி தன்னை ஒப்படைக்க, தியாகம் செய்ய ஏன் மறுக்கிறது? சோட்டாநாகபுரிக்கு ப்பீகாரிடம் பற்று இருக்கமுடியவில்லையே, அது ஏன்?

இந்தியாஎனும் பெருநிலப்பரப்பிலே, பேதைமைகொண்டு ஒரு நாடு என்ற உணர்ச்சியால் மயங்கியிருந்த வட்டாரங்கள், குறிப்பிட்ட சிலஇனத்தார், சிலவட்டாரமக்கள், பொருளாதாரத்துறையிலே, மற்றப்பகுதிகளைச்சுரண்டிச் சுகபோகம் அடைவதை இன்றுதெரிந்துகொண்டனர். தமதுவாழ்வை இழந்துவதைய இனி அந்த வட்டாரங்கள் ஒப்புக்கொள்ளப்போவதில்லை. குஜராத்திலே கோடீஸ்வரர்கள்கொழுக்க, மற்றவட்டாரங்கள் உழைக்கின்றன இன்று. இந்த நிலையை நீடிக்கவிடுவது, பொதுவாகவே நல்லதல்ல. ஒருகுறிப்பிட்ட இடத்திலே எப்படி ஒருசிலர் சுகபோகிகளாகவும் பெரும் பகுதியினர் பாட்டாளிகளாகவும் இருக்கும்நிலைமை, நீக்கப்பட்டுச், சரிசமமான வாழ்வுஏற்படவேண்டுமென்ற சமதர்ம நோக்கம் அறிவுள்ளவர்களின் கவனத்தை இழுத்திருக்கிறதோ, அதுபோலவே ஒரு பெரியநிலப்பரப்பிலே, ஓரிரு சிறுபகுதிகள் முதலாளிகளின் முகாம்களாகி, மற்றப்பகுதிகள் ஏழைகளின் விடுதிகளாகி இருக்கும்நிலைமையையும் திருத்தி அமைக்க வேண்டியது அறிவுடையோர் செயலாகிறது. சமதர்மநோக்கமே இந்தத்தனி அரசுக்கோரிக்கையின் அடிப்படை. உரிமை வேட்கையே இந்தப்பிரிவினைக்கிளர்ச்சியின் உயிர்நாடி. எனவே இதன் 'வளரும் வல்லமை'யையாராலும் தடுக்கமுடியாது. எப்படிப்பொதுவாகவே, பார்ப்பனர் உயர்வகுப்பினராகவாழ்வது. இந்தியா வெங்கும்வெறுக்கப்படுகிறதோ அது போலவே மார்வார்பகுதியினர் இந்தியா வெங்கும், பொருளாதாரத்துறையிலே முடிசூரித்துஇருப்பது கண்டனத்துக்குள்ளாகிவிட்டது. இந்தியாவின் பலபாகங்களிலும், குஜராத்முதலிய சிலபகுதியிலிருந்துசென்ற முதலாளிகள் கூடாரமடித்துக்கொண்டு பணஅரசு அமைத்துக்கொண்டிருப்பதை இந்தியாவின் பல பாகங்களிலும்கண்டிக்கின்றனர். அந்தக் கண்டனந்தின்வேகமும்வளர்ந்துகொண்டிருக்குமேயொழியக்குறையாது.

பீகாரில் ஒருபகுதிக்கு, மற்றப்பகுதியிடம் சிக்கிஇருப்பதுபிடிக்கவில்லை, தனிவாழ்வுகோருகிறதுஎன்றால், தனிஇனமாகத்தனிஅரசுசெலுத்தித் தனிப்பண்புகளுடன் இன்றுவரைஉள்ள இஸ்லாமியரும் திராவிடரும், தனிஇடங்கள்கேட்பதிலே, தவறுஇருக்கமுடியுமா? பீகாரிலே ஒரு பாகிஸ்தான்தேவையாகஇருக்கும்போது, இந்தியாவிலே ஒரு பாகிஸ்தானும், திராவிடநாடும்தேவை என்றுரைப்பதிலே தவறுஎன்ன இருக்கமுடியும்? சோட்டாநாகபுரி, மத்யஅரசாங்கத்தை மறுக்கவில்லையே, என்று கூறுவர். உண்மைதான்! ஆனால், சோட்டாநாகபுரிக்கு, இனமத கலாச்சாரகாரணங்களின்றி, பீகாரிலிருந்துபிரிந்து, தனி அமைப்பாகவிளங்கவேண்டுமென்றஆர்வமும், அங்ஙனம் தனிஅமைப்பாக வாழ்வதன்மூலம் நலனைப்பெருக்கிக்கொள்ள முடியும்என்றநம்பிக்கையும், அங்ஙனம் தனியாகவிளங்கும் உரிமைதனக்கு வேண்டுமென்றஎண்ணமும், அந்த எண்ணத்தைவெளியிடும் துணிவும்இருக்கும்போது, பத்துக்கோடி மக்களின் நலனுக்கு ஒருஇடமும், நாலுகோடி மக்களுக்கு ஒருநாடும் கோருவது, இயற்கைக்கோ, நீதிக்கோ, உரிமை உணர்ச்சிக்கோ பொருத்தமல்ல என்று யார்கூறமுடியும் என்றுகேட்கிறோம். வான்கோழிக்கு நடனமிடும் ஆர்வம்பிறக்கும்போது, மயில் ஆடாதிருக்கவேண்டுமா! எங்ஙனம் சோட்டாநாகபுரி,பீகார் அரசியலுடன் இணைந்திருக்கமுடியாது, மத்யஅரசாங்கத்திலே நான் ஓர்தனிமணியாகவிளங்குவேன் என்று கூறமுன்வந்துவிட்டதோ, அதுபோலவே, பலப்பல சோட்டாநாகபுரிகளைத் தன்னுள்கொண்டதும், பீகார்கள் பலகொண்டதுமான, பாகிஸ்தானும், திராவிடநாடும், மத்ய அரசியலிலே நாங்கள்ஏன் முடங்கிக்கிடக்கவேண்டும், சாம்ராஜ்யமணிகளாக எங்களால் தனித்தியங்கமுடியும், தனி அரசுசெலுத்தமுடியும் என்றுகூறுகின்றன. இதில்தவறு என்ன இருக்கமுடியும்!

இனம் இனத்தோடுவாழவேண்டுமென்றுஇலட்சியம்கொள்வது இயற்கையின்விதி. அதைப்பீரங்கிமூலைகள்கூடச் சிலகாலம்மட்டுமே அடக்கமுடியும், எக்காலமும்அல்ல. ஐரோப்பாக்கண்டத்திலே பிரடரிக்மன்னன், பிறகு கெய்சர், இந்த இயற்கைவிதியைத் தமது பலாத்காரத்தால் மாற்றமுடியும் என்றமனப்பால் குடித்து, மடிந்தனர். மொழிப்பற்று, ஒருகூட்டத்தை உறவினராக்குவது கண்கூடு, இனப்பற்று, இலேசானதாக மதிப்பிடுவதற்குரியதா என்றுகேட்கிறோம்.

சோட்டாநாகபுரி சுதந்திரம்கோரிய அதேநாளில், தார்வார் எனுமிடத்தில், தோழர் S. S. மாலிநாத் என்பவர் தலைமையில்கூடிய கன்னடியர்பொதுக் கூட்டத்திலே, பிரிட்டிஷ் ஆட்சியிலே உள்ளகன்னடப்பகுதிகளை, கன்னடசமஸ்தானமான மைசூர் அரசுடன் இணைத்துவிடவேண்டும், என்ற கிளர்ச்சியைத் துவக்க, ஒரு தனிமாநாடுநடத்த முடிவு செய்யப்பட்டது. இதுபோதுசென்னை, பம்பாய்எனும் இருமாகாணங்களிலும் சிற்சிலபகுதிகளில், கன்னடமொழியினர் வாழுகின்றனர். எந்தெந்த வட்டாரங்களிலே கன்னடமொழியினர் பெருவாரியாக உள்ளனரோ, அந்த வட்டாரங்களை மைசூர் அரசுடன், சேர்த்துவிடவேண்டுமென்று, கர்னாடகஅரசுஅமைப்பு ஆர்வம்கொண்டவர்களுக்குத்தோன்றுகிறது. மொழிவழிநிற்கும்மக்கள், தமதுமொழியைக்கொண்டமக்களுடன் கூடிவாழ விரும்புகின்றனர், இது இயற்கைதானே! எங்ஙனம், கன்னடமொழியினருக்குத் தார்வார், பம்பாய் மாகாணத்திலே ஒரு பகுதியாகஇருப்பது இஷ்டமில்லையோ, அதனைப்பிரித்து மைசூர் அரசுடன் சேர்க்கவேண்டுமென்ற எண்ணம் ஏற்படுகிறதோ, அதுபோலவே இன்று திருவிதாங்கூர் இராஜ்பத்திலே ஒருபகுதியாகஉள்ளதும், பெரிதும் தமிழர்களையே கொண்டதும், தமிழ்ப்பண்பே அதிகமுடையதுமான நாஞ்சிநாடு, தமிழகத்துடன் இணைந்திருக்கவிரும்புவது இயற்கையாக எழும்பக்கூடியதேயாகும். இதுபோன்றே, மாராட்டியர் தனிமண்டலம் கேட்கும் உரிமைபெற்றவர்களே! சீக்கியர்கள், தனிஅரசுகேட்கின்றனர்!! அது மட்டுமா? தோழர் ஆனே அவர்கள், மத்ய மாகாணத்திலே ஒருபகுதியும் பீகாரிலே ஒருபகுதியும், பிரிக்கப்பட்டு, விதர்ப்ப நாடு என்ற தனிநாடாக்கப்படவேண்டும் என்று இரண்டாண்டுகளுக்குமுன்பே கிளர்ச்சியைத்துவக்கினார். இலங்கையிலே சிங்களம், தமிழகம்என்று இருஅரசுகள் இருத்தலேமுறை என்றபேச்சும்எழுந்தது இரண்டாண்டுகளுக்குமுன்பு. ஏன். இவைகளைக்கூறுகிறோம்எனில், மொழி, பொருளாதார நிலை ஆகியவற்றைக் காரணமாகக்கொண்டு, பிரிவினைக்கிளர்ச்சியும், தனிவாழ்வுகோருவதும் பிறந்துள்ள இக்காலத்திலே, இனத்தையும், வரலாற்றினையும் ஆதாரமாகக்காட்டி, இஸ்லாமியர் பாகிஸ்தானும், திராவிடர் தனிநாடும் கேட்பதிலே, தவறு என்ன இருக்கமுடியும் என்பதை நடுநிலை நின்று, மாற்றுக் கருத்துடையார் யோசித்துப்பார்க்க வேண்டும் என்பதற்காகத்தான்.

பிரிட்டிஷார், அயர்லாந்தில் ஒரு சிறு பகுதியை, அல்ஸ்டரைப் பிரித்துத்தனி அமைப்பாக்க, இசைந்தனர், ஆனால்எறக்குறைய 75 அல்ஸ்டர்களின் அளவுள்ள பாக்கிஸ்தானைத் தனிஅமைப்பாக, அவர்

(5ம் பக்கம் பார்க்க)

## பீகாரில் பாகிஸ்தான்!

4-ம் பக்கத் தொடர்ச்சி.

களின் உள்ளம் இடந்தரவில்லையாம், இந்தியா ஒரேநாடு என்ற உத்தமமானநோக்கமாம் அவர்களுக்கு. ஸ்பெயின், செக்கோஸ்லோவேகியா, ஆஸ்திரியா, ஆல்பேனியா, பெல்ஜியம், ஹாலந்து, ஸ்விட்ஜர்லந்து, லிதுவேனியா, அயர்லாந்து எனும் 9 நாடுகள் சேர்ந்தால் எவ்வளவு பெரிதாக இருக்குமோ, அவ்வளவு நிலப்பரப்புக் கொண்டதாகப் பாகிஸ்தானம் இருக்கும். ஆனால் இந்த ஐரோப்பிய சிறு நாடுகளின் சுதந்திரத்தைக்காப்பாற்ற முனையும் பிரிட்டிஷாருக்குப்பாகிஸ்தான் அமைப்பு பாதகம் என்று தோன்றுகிறதாம்!! ஏனோ? ஐபீரியதீபகற்பம், ஸ்பெயின், போர்ச்சுகல் என்று பிரிந்ததும், ஸ்காண்டிநேவியப்பரப்பு; நார்வே, ஸ்வீடன், என்றுதனிஅரசுகளானதும், பால்கன் தீபகற்பத்திலிருந்து, கிரீஸ், பல்கேரியா, ருமேனியா, யுகோஸ்லவியா, ஹங்கேரி, துருக்கிஎனும் தனிநாடுகள் மலர்ந்ததும் பிரிட்டிஷாருக்குத்தெரியும், ஆனால் இந்தியாவிலே, இந்துஸ்தான், பாகிஸ்தான், திராவிட நாடு என்று மூன்றுஅரசுகள் அமைக்கவேண்டும் என்று கூறுவது மட்டும், அவர்களுக்கு விருப்பமில்லை! ஏன்? இந்தியா ஒரு தேசம் என்பதை இவ்வளவு அக்கரையாகப் பிரிட்டிஷார் போதிப்பதன் மர்மம் என்ன? இதனை ஆராய்ந்து உண்மையை உணருவோமென, இந்திய விடுதலை வீரனாவான், பாகிஸ்தானா, திராவிட நாடா என்று பதைப்பவன், வெறும் வீணனாவான்!!

பீகார் மாகாணத்திலே ஒருபகுதியாக இதுபோது உள்ள சோட்டா நாகபுரி வட்டாரம் பெரிதும் ஆதிகுடிகளின் இடமாகவே இருக்கிறது. இந்தவட்டாரம் முழுவதிலும், குறிப்பிடத்தக்கதாக உள்ள நகரங்கள் இரண்டே! ராஞ்சியும், ஹஜாரிபாக் என்பவைகள். ஆகவே, பூர்வீகக் குடிகள் வசிக்கும் இப்பகுதி, இதுகாறும் புறக்கணிக்கப்பட்டுவந்திருக்கிறது என்பது விளக்கமாகத்தெரிகிறது. சோட்டா நாகபுரிப்பகுதியின் பரப்பு 2747 சதுர மைல்கள், இங்கே இரண்டு குறிப்பிடத்தக்கநகரங்களேஉள்ளன; அதன்பொருள் என்ன? இப்பகுதி மக்கள் இன்றுவரை, காடுமேடுகள்நிரம்பிய, காலப்போக்கின் கரத்தால் திருத்தப்படாத பட்டிதொட்டிகளிலே உழலுகின்றனர் என்பதுதான்! பீகாருடன்இணைந்து இக்கதியிலேஇருப்பானேன், தனித்துவாழ்ந்து நமக்குத் தேவையான திருத்தங்களைச்செய்து கொள்வோம் என்று சோட்டாநாகபுரி மக்கள் கருதுவதிலே குற்றம் இல்லை! முடியுமா? முடியுமென்றே, அந்தவட்டாரத்தின் இயற்கைவளத்தைத்தெரிந்தவர்கள் கூறுவர். உலகிலே, உலோகப்பொருள்கள் பெரும்அளவுகொண்ட நிலப்பகுதிகளிலே சோட்டாநாகபுரி முக்கியமானது, இங்கு கிடைக்குமளவு அப்ரேக் (மிக்கா) உலகிலே வேறுஎங்கும்கிடைப்பதில்லை. இங்கு, பொன், இரும்பு, நிலக்கரி, தாம்பரம், வெள்ளி, நிக்கல், காரீயம், பாக்சைட்முதலிய பலபொருள்கள் கிடைக்கின்றன, இயற்கை இவ்வளவு தந்தும், சோட்டாநாகபுரி பூர்வீகக்குடிகளின் இடமாகவே இன்றும் இருக்கிறது, வாழ்வின்வளம் அவர்களுக்கு வழங்கப்படவில்லை. இங்கு ராணிகன்ஜ், ஜாரியா, ராம்கார், பொகாரோ, போன்றஇடங்களிலும் வேறுபலஇடங்களிலும் நிலக்கரிகிடைக்கிறது. அவைடாட்டாவின் தொழிற்சாலையிலே ஜ்வாலையைக்கிளப்புகிறது, செல்வத்தையல்ல சுடுநாற்றத்தையே சோட்டாநாகபுரியினர்பெறுகின்றனர். இயற்கைவளமிருந்தும் பலனை அடையவில்லை, காரணம், பீகாருடன் இணைந்து பீகாரின்மற்றப்பகுதிகளின் வாழ்வை வளமாக்கிக்கொண்டிருக்கும் ஏமாளியாக இருந்துவருவதுதான். எனவேதான், சோட்டாநாகபுரி, தனி மாகாணம்கோருகிறது. பீகார் மாகாணத்தின் நிலப்பரப்பு **51000** சதுர மைல்கள், இதிலே 2747 சதுரமைல் கொண்டது சோட்டாநாகபுரி, அச்சிறுபாகம், தன்வளம் சீரழிவதுகண்டு சீறுகிறது, தனித்துச்சுகத்துடனும் சுயமரியாதையுடனும்வாழவிரும்புகிறது, திராவிடநாடு என்றுநாம் இன்று சென்னை மாகாணத்தைக் குறிப்பிடுகிறோம், இதன் பரப்பு, 142000 சதுரமைல்! இந்தப் பரப்பு ஒரு தனிநாடாகவிளங்கமுடியாதா என்றுகேட்கிறோம். திராவிடநாடு என்று நாம் எல்லைக்கோடிடும் இடம், இங்கிலாந்தைப்போல இருமடங்குபரப்புள்ளது! 14 ஆல்பேனியாக்களுக்குச் சமம்! 27 அல்ஸ்டர்களுக்குஈடு! 4 ஆஸ்ட்டிரியாக்களைக்கொண்டபரப்பு! 10 பெல்ஜியம், 5 பல்கேரியா, இரண்டு ஜெக்கோஸ்லோவேகியா, 3 கிரீஸ், 4 அயர்லாந்து. 10 ஹாலந்து, 4 போர்ச்சுகல், 14 பலஸ்தீன், இவைகளுக்குச்சமம், திராவிடநாடுஎன்று நாம் குறிப்பிடும் இடம். இங்கிலாந்து, அயர்லந்து, ஹாலந்து ஹங்கேரி, பலஸ்தீன், இவ்வளவு நாடுகளையும், திராவிடநாட்டிலே அமைத்துவிடலாம், அவ்வளவு நிலப்பரப்புஇருக்கிறது! என்றாலுங்கூட பிரிட்டிஷாருக்குத், திராவிடநாடு தனித்துஇயங்கமுடியுமா என்றசந்தேகம்இருக்கிறது! என்ன ஆபத்துநேரிட்டுவிடுமோஎன்ற சஞ்சலம் பிறக்கிறதாம்! என்னகனிவு! எவ்வளவு கருணை!!

# துரைமகனார் தாபம்.

திராவிட நாடு திராவிடருக்கே—என்னும் கிளர்ச்சியைக் கேலிக்கூத்தென்று எண்ணியவர்களிலே. பெரும்பான்மையினர், இன்று, அப்போக்கை மாற்றிக் கொண்டு வருகின்றனர். இன்றும் சிலர் இருக்கிறார்கள், ஏமாளித்தனத்திலே ஏகபோக உரிமை பெற்று! திராவிடஸ்தான் கூச்சலின் காரணமே எனக்கு விளங்கவில்லை என்று சென்ற கிழமை மதுரையிலே பேசியிருக்கிறார் நண்பர் முத்துரங்கம். என் செய்வது? மந்தமதிக்கு மருந்தூட்டும் பணியினரிடம் சிகிச்சை பெறுமாறு நண்பருக்குக் கூறுகிறோம். இங்ஙனம் சிகிச்சை பெறவேண்டியவர்கள் தவிர மற்றவர்களுக்கு இன்று இக்கிளர்ச்சி, கேலிக்கூத்தாகவோ, கவனிக்கப்படவேண்டியதல்லாத பிரச்னையாகவோ இல்லை. இதிலேதோ ஓர் ஜீவசக்தி இருக்கிறது என்று அவர்கள் உணரத்தொடங்கியுள்ளனர். அவர்கள் அறிவு பெற்றுவருவதுகாண நாம் அகமகிழ்கிறோம், ஆனால் பெற்ற அறிவைப் பயன்படுத்திக் கொள்வதிலே அவர்கள் நன்னோக்கமும் நன்னெறியும் கொள்ளவேண்டும் என்பது நமது அவா.

மெயில் பத்திரிகை தன்னைத்தானே மேதாவிகளின் ஏடு என்று சேர்ந்தெடுத்துக்கொண்டு, ஆட்சி செலுத்துகிறது. நாட்டிலே நானாவிதமானவர்கட்கும், புத்தி புகட்டும் செயலில் ஈடுபட்டிருக்கிறது. போகட்டும், எளிதான காரியத்தைச் செய்யும் இயல்பு, பலருக்கு உண்டு. மெயில் அந்தக்கூட்டத்திலே குலவட்டும், நாம் குறைகூறவில்லை. சிதைந்துபோன செய்திகளை வைத்துக்கொண்டா, ஒரு பிரச்னையைப்பற்றிக் கருத்துரை தெரிவிக்கவேண்டும்! ஓட்டைப்படகேறி உல்லாசப்பயணம் செய்வதா! திராவிடநாடு பற்றித்தனது கருத்தை மெயில் தலையங்கத்திலே 23ந்தேதி தீட்டியிருக்கிறது. சென்னை கோகலே மண்டபத்தில் பெரியார் ஆற்றிய சொற்பொழிவினைக்குறித்துக் கருத்துரைக்க முற்பட்டிருக்கிறது. ஆனால் மெயில் ஆசிரியர், அந்தக் கூட்டத்தைப்பற்றிச் சிதைந்துபோன செய்தியையே பெற்றிருக்கிறார் என்பது அவருடைய தலையங்கப்போக்கினால் தெளிவாகிறது. "சென்னை மாகாணம் முழுவதும் திராவிடநாடு" என்று பெரியார் கூறினார், ஆந்திரர்கள் சுயராட்சி கோருகின்றனரே, அவர்களின் கோரிக்கையை இவர் அலட்சியப்படுத்துகிறார், நீங்களும் திராவிடர்களே. ஆகவே திராவிடநாட்டிலே ஒரு அங்கமாக நீங்கள் சேர்த்துவிடப்படுவீர்கள் என்று ஒரே அடியாகக் கூறி விடுவார்போலிருக்கிறது—என்று மெயில் எழுதுகிறது. அதாவது, ஆந்திரரின் சுயாட்சியைத் தட்டிப்பறித்துவிடவே திராவிடநாடு கேட்கப்படுகிறது,

(8ம் பக்கம் பார்க்க)

# பிராமணர் யார்?

## கைவல்யம்.

இன்னதன்மையோடிருப்பவன் பிராமணன், இன்னவைஅடையப்பெற்றது பிராமணியம் என்று உபநிஷத்சொல்லியிருப்பதை உங்களுக்குச்சொல்லுகிறேன். உபநிஷத் பிரமாணத்துக்கு முன்னால் எந்தப் பிரமாணத்தையும் தள்ளிவிட வேண்டுமென்பதே ஆரிய மதசித்தாந்தம்.

சத்து சித்து ஆனந்தரூபமாயும், எல்லோருடைய மனோவிருத்திக்கு சாட்சியாயும், வேதத்தின் அந்தங்களால் உணர்த்தக்கூடியதாயும், அரூபியாயுமுள்ள பிரமத்தை அறிந்ததன்மைக்கு பிராமணியம் என்று பெயர். ஆரியப்பார்ப்பானுக்கும் திராவிடத் தமிழனுக்கும் பழையகாலத்தில் யாதொரு சம்பந்தமுமில்லை. ஆரிய மதபுராணகதைகளின் ஏமாற்றால் தமிழர்கள் ஆரியப்புரோகிதகிரியைகளைச்செய்து வருகிறார்கள். சீவனத்துக்குத் தொழில் முறையாகவைத்துக்கொண்டு ஏமாற்றிவரும் புரோகிதப் பார்ப்பானைப் பிராமணன் என்றுநம்பி அவனுக்கும் அவன் கூட்டத்தாருக்கும் தானதருமங்கள் கொடுத்துவருகிறார்கள். அந்தத் தானதருமங்கள் உண்மைப்பாத்திரமானபிராமணனுக்குப்போகாமல் பாழடைகின்றன. அதுவுமல்லாமல் பிராமணத்தன்மையில்லாதவனுக்குத் தானதருமம்செய்தவன், தானப்பலனையும்இழந்து, உயர்ந்தநிலையுங்கெட்டு, குடும்பமும்பாழடைந்து, நரகத்திற்கும்போவானென்று தானதருமம்கொடுக்கவிதித்த அந்த ஆரியஸ்மிருதியேசொல்லுகின்றது. கீழே விழுவதினின்றும் தப்புவிப்பதற்குப் பாத்திரம் என்றுபெயர். அதாவது நரகத்திற்குப் போகிறவனைப்போகாமல் காப்பாற்றுகிறவனுக்கே சற்பாத்திரம்என்றுபெயர். ஊர்வம்புபேசி சீட்டாடிப் பொழுதுபோக்கும் பார்ப்பானுக்கும், பிராமணக்கிருத்யமில்லாமல் பல தொழில்செய்து காலந்தள்ளும் பார்ப்பானுக்கும் கொடுக்கப்படும் தானம் நரகத்திற்குப் போகிறவனைத் தடுத்துச்சொர்க்கத்துக்குஅனுப்புமா? ஆலோசித்துப்பாருங்கள்.

பிராமணனென்றால், இன்னதன்மையோடிருப்பவனென்பதைப்பல ஸ்மிருதிகளும் இதிகாசங்களும் சொல்லியிருக்கின்றன. அதில் வஜ்ஜிரசூசிகோபநிஷத்தில் ஆட்சேபன சமாதானத்தோடு சொல்லியிருப்பதைச் சொல்லுகிறேன். உபநிஷத்பிரமாணத்தை ஆரியமதப் பிரிவுகளனைத்தும் ஒத்துக்கொள்ளுகின்றன.

பிரம, க்ஷத்ரிய, வைசிய, சூத்திரஎன வருணம்நான்கு. அவைகளுள், பிராமணனே சிறந்தவன்—உயர்ந்தவன், என்று வேதங்களெல்லாம் கூறுகின்றன. அவ்விஷயமாகப் பின்வரும் சந்தேகங்கள் பிறக்கும். பிராமணன் என்பவன்யார்? சீவன் பிராமணனா? தேகம் பிராமணனா? பக்தி பிராமணனா? கருமம் பிராமணனா? தருமம் பிராமணனா?

சீவன் பிராமணன் என்றுசொன்னால் முக்காலங்களிலும் பல தேசங்களிலுமுள்ள சீவன் ஒரேரூபமாயிருப்பதாலும் ஒரு சீவனுக்கே கர்மவசத்தால் அநேக தேகங்கள் ஏற்படுமென்றுசொல்வதாலும் இதற்கு விரோதம்ஏற்படும். ஆதலால் சீவன் பிராமணனல்ல.

தேகம் பிராமணனென்றுகூறலாமா? எல்லோருடையதேகமும் பஞ்சபூத சம்பந்தமாக ஏற்பட்டிருப்பதால் தேகங்களில் தாரதாம்யமில்லை. சனன மரண முதலியவைகள் எல்லாத்தேகங்களுக்கும் பொது. பிராமணன் வெளுப்பு மற்றவர்கள் பழுப்பு, மஞ்சள், கருப்புஎன்ற ஒழுங்குமில்லை ஆகவே தேகத்துக்கு பிராமண்யம்கூறலாகாது.

சாதிபால் பிராமணியம் ஏற்படுமென்றுகூறவும்இடமில்லை. அநேகசாதிகளிடமிருந்தும் மனிதரல்லாத மற்றப் பிராணிகளிடமிருந்தும் மகரிஷிகள்பிறந்திருக்கிறார்கள். அவர்களே பிராமணியத்திற்குக் கர்த்தாக்களாகவும் இருக்கிறார்கள். மானிலிருந்து ருஷ்யசிருங்கரும், குசத்திலிருந்து கௌசிகரும், நரியிலிருந்து சம்புகரும், புற்றிலிருந்தோ பாம்பிலிருந்தோ வால்மீகியும், செம்படப் பெண்ணிலிருந்து வியாசரும், முயலிலிருந்து கௌதமரும், ஊர்வசியிடமிருந்து வசிஷ்டரும், கலசத்திலிருந்து அகத்தியரும் உதித்தார்கள். உலகில் இவர்களெல்லாரும் பெரிய பிராமணர்களாக விளங்கினார்கள். ஆகையால் சாதியால் பிராமணியம்என்பதில்லை.

பக்தி சம்பந்தம் பிராமணியம் என்னலாமோ என்றால், பல சாதியாரிடத்தும் கடவுளைப்பற்றிய அறிவு காணப்படுவதால், அவர்களையெல்லாம் பிராமணர்களென்றேசொல்லவேண்டும். ஆனதால் பக்தியால் ஒருசாதியாரைப் பிராமணர் என்று கூறஇடமில்லை.

கருமம் பிராமணனென்றாலோ பிராமணனென்று கூறிக்கொள்ளும் எல்லாப் பிராமண சாதிக்கும் மூன்றுவித கருமங்களிருப்பதால், அவர்களெல்லோரும் கருமவசத்தாரா யிருப்பதாலும் இதுவும், பொருந்தாது.

தருமம்செய்பவனேபிராமணனென்று ஏன் கூறலாகாது? எல்லாச் சாதியாரிடத்தும் பணச்செலவு தருமம் முதலிய சற்குணங்கள்காணப்படுவதால், ஒருசாதியாரை மட்டும் பிராமணனென்று கூறிவிட முடியாது.

பின்யார்தான் பிராமணன்?

சாதி குணக்கிரியைகளற்றதாயும் இரண்டற்றதாயும், பசி, தாகம், சோகம், யோகம், கிழத்தன்மை, மரணம் என்பவைகள் அற்றதாயும், இருத்தல்-உண்டாதல்-வளர்தல்—திரிதல்-குறைதல் -நசித்தல் என்ற சட்பாவ விவகாரங்கள் அற்றதாயும், சத்தி ஞானந்த அநந்த ரூபமாயும், நிர்விகற்பமாயும், மன சங்கற்பங்கள் எல்லாவற்றிற்கும் ஆதாரமாயும், எல்லாப் பூதங்களிடத்தும் அந்தர்யாமியாக பாவியிருப்பதாயும், ஒப்புயர்வற்றதாயும். அனுபவித்தே அடையத்தக்கதாயும், அபரோட்சமாகப் பிரகாசிப்பதாயுமுள்ள ஆத்மாவை உள்ளங்கை நெல்லிக்கனிபோல நேராக அனுபவிப்பவன் எவனாயிருந்தபோதிலும், கிருத கிருத்யனாகி, காமகுரோதலோப மோக மதமாச்சர்யம் என்ற அஷ்டவர்க்கம் அற்றவனாய் சமம் தமம் உபாதி தீக்ஷை சமாதானம் சிரத்தை என்ற ஷட்க சம்பத்துக்களைப் பூரணமாக அடைந்து, சங்கற்பம், திரிஷ்ணை, ஆசை மோகம்முதலியன நீங்கப்பெற்றவனாய், அகங்காரம் முற்றிலும் ஒழித்த மனமுடையானாய், இருப்பவன் யாரோ அவன்தான் பிராமணன். வேறு எவ்விதத்திலும் பிராமணியம் சித்திக்கமாட்டாது. இப்படியாகஉபநிஷத்சொல்லுகிறது. சுயமரியாதைச் சங்கம் சொல்வதல்ல.

பிராமணன் ஆவதற்கும் பிராமணனாயிருப்பதற்கும் இத்தனை கஷ்டமென்றால், பிராமண நிலையும் பதவியும் எல்லாப் பதவிகளையும்விட உயர்ந்தது, ஒருவனுடைய பாவத்தைத் தீர்த்துப் புண்ணியத்தைக் கொடுப்பது. அதனாலேதான் அவ்வளவு கஷ்டப்பட்டு அடையவேண்டும். குளித்து வ்பூதிபூசி மூக்கையும் காதையும் தொட்டு முணு முணுத்து ஆற்றங்கரையில்தட்சணைக்கு ஆளைப்பார்த்துக்கொண்டிருப்பது பிராமணியமல்ல. ஓம, செபமந்திரக்கிரியையென்றும் அதையும்இதையும் அங்கும் இங்கும் வைத்து நெருப்பை மூட்டி நெய்யைப் பாழ்பண்ணி, மூட்டை கட்டுகையில் முணு முணுத்து, அது போதவில்லை இது கொஞ்சம், எல்லாம் முன்னோர்களோடு போச்சு என்றுமுகம் சுருக்கி சலித்துக் கோபம் வந்து, நயம் பேசிப் பின்னும் கொடுப்பதை மூட்டை கட்டிப்போகும் புரோகிதம் பிராமணியமல்ல. குட்டிச்சுவரான புரோகிதமே உன்னால் குட்டிச்சுவரான குடும்பங்கள் எனக்குத் தெரிய அநேக மிருக்கின்றன. பழைய பணக்காரக் குடும்பங்கள் இதனால் ஒரு க்ஷேமமும் அடையவில்லை. ஆகையால் புதுப்பணக்காரக் குடும்பங்களுக்கு இந்த மோகம்உண்டாகக்கூடாது

தானம் கொடுக்கஉத்தமப்பிராமணன் இல்லாவிட்டால், தன்னுடன் பிறந்தாள், தன் பெண், ஆகிய இவர்களுக்குக்கொடுக்கும் தானம் உத்தமமான பிராமணனுக்குத் தானம் கொடுப்பதைவிடக் கோடி பங்கு புண்யமென்று அந்தஸ்மிருதியே கூறுகிறது.

# கிழப்புலி!

ஜெயப்பூர் சமஸ்தான திவானக, சர். மிர்சா இஸ்மாயில் இருப்பது, இந்துமகா சபைக்காரருக்குப் பிடிக்கவில்லை, வேறு காரணம் இல்லை, அவர் ஒரு முஸ்லீம் என்பதன்றி. இந்துராஜ்யத்திலே ஒரு முஸ்லீம் திவானக இருப்பதா என்று, இந்துமகாசபை சீறுகிறது, சர். மிர்சா, முஸ்லீம் லீகினருமல்ல, தேசியவாதிகளைத் தழுவியே நடப்பவர். அப்படிப்பட்டவர் மீதுங்கூட இந்து மகாசபைக்கு, துவேஷம் இருக்கிறது. சர். மிர்சாமீது பழி பல சுமத்தி, அவருடைய நிலைமையைக் கெடுக்கவேண்டுமென்று தீர்மானித்து, இந்துமகாசபை வேலையைத் துவக்கிற்று. கேட்டவுடனேயே கோபம் கொந்தளிக்கும் விதமான குற்றச்சாட்டு வீசப்பட்டது.

1. சர் மிர்சா இஸ்மாயில் இந்துகோயில்களை இடிக்கிறுர்.

2. இந்திமொழியைப் புறக்கணித்துவிட்டு உருது மொழியை ராஜாங்க மொழியாக்குகிறுர்,

என்ற இருபெரும் பழிகள் சுமத்தப்பட்டன. ஒரு முஸ்லீம் திவானகஇருந்துகொண்டு, நமது கோயில்களை இடிக்கிறுராமே, நமது இந்திமொழிக்குப் பதிலாக உருது வைத்திணிக்கிறுராமே, இது அக்ரமமல்லவா, இது அடுக்குமா, ஒரு இந்து ராஜ்யத்திலே இதுபோல நடக்கலாமா என்று இந்துக்கள் ஆத்திரமொழி பேசாதிருப்பாரா, இந்தக்குற்றசாட்டுக்கு அவரை உள்ளாக்கி விட்டபிறகு, குற்றச்சாட்டும், பொறுப்பற்றவரால் சுமத்தப்படவில்லை, இந்துமகாசபைத்தலைவர் சவர்க்காரே, பத்திரிகையிலே அறிக்கை வெளியிட்டார். ஆனல் உண்மை என்ன? சர். மிர்சாவின் நிர்வாகம் இப்படிப்பட்டதா? இல்லை. யார் கூறுவது? இந்துமகாசபையின் தென்னுட்டுத் திலகமாக இருக்கிறுரே! டாக்டர்வரதராஜுலுநாயுடு, அவர் கூறுகிறுர். நேராக ஜெயப்பூர் சென்று, நிலைமையைக் கண்டறிந்து, அறிக்கை வெளியிட்டார். சர். மிர்சாமீது வீண் பழி சுமத்தப்படுகிறது. கலனன சில கோயில்களை இடித்தனரே தவிர இந்துக் கோயில்களைத் துவேஷத்தால் இடிக்கவில்லை. மூன்று இலட்ச ரூபாய் செலவிலே புதிதாக இந்துகோயில்கள் கட்டும்படி சர். மிர்சா உத்திரவிட்டிருக்கிறுர். ஆகவே அவர் மீது, இந்துக் கோயில்களை இடித்துவிட்டார் என்று பழி கூறுவது அடாது. இந்திமொழிக்குப் பதிலாக உருதுவைத் திணித்துவிட்டார் என்று குறை கூறுவதும் பொருளற்றது. அவர் திவானவதற்கு நெடுநாட்களுக்கு முன்பே, ஜெயப்பூரில், உருது ராஜாங்க மொழியாக, இருந்து வருகிறது. சர். மிர்சா, உருதுவைத்திணிக்கவில்லை. ஏற்கனவே இருக்கும் ஏற்பாட்டின்படி அவர் நடந்து வருகிறுர். அவர் இந்துகளுக்கு விரோதமாக ஒரு காரியமும் செய்யவில்லை, என்று டாக்டர் வரதராஜுலு நாயுடு அறிக்கை வெளியிட்டார். அதற்குக்கிடைத்த மதிப்பு என்ன? இந்துமகா சபை, உண்மையைத் தெரிவித்த டாக்டருக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டதா? இல்லை! நன்றிகூற வேண்டாம், சர். மிர்சாமீது சுமத்தியகுற்றச்சாட்டை வாபீஸ் வாங்கிக்கொண்டதா? அதுவுமில்லை! ஏதோ தெரியாமல் அவர்மீது குறை கூறிவிட்டோம் என்று வருத்தப்பட்டு, மௌனமாக இருந்துவிட்டதா? இல்லை. சர், மிர்சா குற்றமற்றவர் என்று டாக்டர் அறிக்கை வெளியிட்டபிறகு, அதனைத் துச்சமாகக்கருதி. டாக்டர் நாயுடுவின் சொல்லை நாடு ஏற்கக்கூடாது என்ற கருத்துடன், சர். மிர்சாமீது, பழயபடி அதே குற்றச்சாட்டைச் சுமத்தி அதே சவர்க்கார் அறிக்கை வெளியிட்டார். இதனுடைய நோக்கம் என்ன? டாக்டர் நாயுடுவின் அறிக்கையை இந்து மகாசபைத் தலைவர் பொருட்படுத்தாத காரணம் என்ன? டாக்டர்வரதராஜுலு பொய்அறிக்கை விடக்கூடியவர் என்று சவர்க்கார் கருதுகிறுரா? நாட்டுமக்களுக்கு நாயுடு அறிக்கையிலே நம்பிக்கை இராது என்று எண்ணுகிறுரா? இந்து மகாசபையிலே டாக்டர் நாயுடுவை ஒரு செல்லாக்காசாகக் கருதுகிறுர்களா? என்ன துணிச்சலோடு, டாக்டரின் அறிக்கைக்குப்பிறகு சவர்க்கார், மறுப்புரை வெளியிட்டார்? திகைப்பும் கோபமும் வருகிறது, டாக்டருக்குக்கிடைதத இந்த மரியாதையைக்கண்டு. என் செய்வது? அவரோ, இந்து மகாசபையைக் கட்டிக் கொண்டுஅழுகிறுர், இந்தக்குட்டுப்பட்டுங் கூடச்சவர்க்கார் இப்படி டாக்டரின் முகத்திலே கரி பூசியபிறகு, இந்துமகா சபைத்தலைவருக்கு, இஸ்லாமியரிடம் வீணன துவேஷம் இருக்கிறது என்பது தெரிந்தபிறகு, இந்துமகாசபையைவிட்டு விலகுவதைவிட. டாக்டர், வீரவரதருஜுலு, செய்யக்கூடியது வேறென்றுமில்லை என்றே யாரும் கூறுவர். ஆனல் என்ன செய்கிறுர் டாக்டர்? என்ன செய்யும் கூண்டிலடைபட்ட கிழப்புலி! வெளியே நின்று வேலால் குத்துபவனைக்கண்டு உறுமும்! வேறென்ன செய்ய முடியும்? அதுபோலவே டாக்டரும், இந்துமகா சபைபொறியிலே சிக்கிவிட்டதால், தமது பழயவீரத்தை மறந்து, சவர்க்காரின் போக்கை கண்டித்துவிட்டு வெளி ஏறுமல், அங்கேயே இருந்துகொண்டு, மீறுபடியும் ஒரு அறிக்கை விடுகிறுர், சர். மிர்சாமீது அபாண்டம் சுமத்தப்படுகிறது, அவர் குற்றம் ஏதும்செய்யவில்லை என்று விளக்கி! சர். மிர்சாமீதுமட்டுமல்ல, இப்போது சவர்க்காரின் அறிக்கை, டாக்டர் நாயுடுவின் சுயமரியாதையையும் சேர்த்தே தாக்குகிறது. அதற்குப்பரிகாரம் என்ன?

★

## மதுரை
### திராவிட மாணவர் மாநாடு.

தோழர் ஜனர்த்தனம் அவர்கள் தலைமையில் மேற்படி மாநாடு மதுரை, விக்டோரியா எட்வர்டு மண்டபத்தில் நடைபெற்றது. தோழர் டாக்டர் A. கிருஷ்ணசாமி அவர்கள் மாநாட்டைத் திறந்துவைத்தார். மாணவத்தோழர்கள் அன்பழகன், நெடுஞ்செழியன் தவமணிராசன், சத்யேந்திரன், கபிஞமுகம்து E. V. K. மிராண்டா ஆகியோர் கொடியேற்றுவிழாக்களிலும், தீர்மானங்களிலும் சொற்பொழிவாற்றினர். கரந்தைத் தோழர் பெரியசாமிப்புலவர், பெரியார், S. ராமனுதன், பொன்னம்பலனர். A. வேணுகோபால், C, N. அண்ணுதுரை, ஆகியோர் திராவிட மாணவர் நிலை பற்றிப்பேசினர். தலைவர்களுக்குப் பாண்டியனர் மாளிகையில் விருந்துபசாரம் நடைபெற்றது.

---

## கண்ணப்பர் கழகம்

சென்னை இராயபுரத்திலுள்ள கண்ணப்பர் கழகத்தையும் அதனுதரவில் நடைபெறும் பள்ளிக்கூடத்தையும் தோழர் அண்ணுதுரை 20-ந் தேதி பிற்பகல் பார்வையிட்டார். தலைமை ஆசிரியரும், கழக நிர்வாகஸ்தரும் வரவேற்று உபசரித்தனர். மாணவிகளின் ஆடல் பாடல் நடைபெற்றபிறகு, பள்ளிக்கூடத்தைப் பாராட்டித் தோழர்கள் அண்ணுதுரையும் N, V. நடராசன் அவர்களும் பேசினர். வணக்கங்கூறலுடன் கூட்டம் இனிது முடிந்தது.

---

தந்தி:—"புறமார்க்" திருச்சி.



## துரைமகனார் தூபம்.

(5-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஆந்திர அன்பர்களே! இதை அறிந்து, உடனே திராவிடநாட்டுக் கிளர்ச்சிக்கு எதிரிடையாக வேலைசெய்யுங்கள்—என்று மெயில், தூண்டுகிறது, என்று கூறலாம். அந்தக் கெட்டநோக்கத்தோடு நாம் அதனைத் தீட்டவில்லைஎன்று துரைகூறக் கூடும். நோக்கம் அதுவாக இல்லாமற் போனாலும், விளைவு அது போலத்தான் இருக்கும்.

கோகலே மண்டபக் கூட்டத்திலே, திராவிடநாட்டுக்கு எது எல்லை என்பதற்கு விளக்கம் கூறுகையில் பெரியார், தற்போதுசென்னைமாகாணம்என்றுள்ள அமைப்பைத் திராவிடநாடு என்று தனி அமைப்பாக்கி விட்டால்போதும், என்று கூறினார். ஆந்திரர்களின் நிலைமை, திராவிடநாட்டிலே, எப்படி இருக்கும் என்று அந்தக்கூட்டத்திலே அவர் பேசவில்லை. பேசியிருக்கவேண்டிய அவசியமும்இல்லை. ஏனெனில், திராவிடநாட்டிலே ஆந்திரரின்நிலைமை என்னஎன்பதுபற்றிப் பெரியார்தமது கருத்தை ஏற்கனவேபலமுறை வெளியிட்டிருக்கிறார், மெயில் ஆசிரியருக்குள்ள அளவு மறதிமக்களுக்கு இராதுஎன்று எண்ணியே, அன்றையகூட்டத்திலே, ஆந்திரர் விஷயமாகப் பெரியார் பேசவில்லை. மெயில் ஆசிரியர், ஆந்திரரைத் திராவிடநாட்டிலே,அவர்களின் இஷ்டத்தைக் கேட்காமலேயேபெரியார் சேர்த்து விடுவார் என்று எழுதியிருக்கத் தேவையில்லை, நேர்மையும் பத்திரிகாசிரியருக்கு இருக்கவேண்டிய பண்புகளிலே ஒன்று என்ற கொள்கையை அவர் கடைப்பிடிப்பவரானால், இதேமெயிலின் முன்னாள் தலையங்கமொன்றுக்குப் பெரியார் விடுத்த பதிலிலே,—அச்சிடப்பட்ட அறிக்கையிலே—திராவிடநாட்டிலே ஆந்திரர் நிலைமை எப்படி இருக்கும்என்பது பற்றித் தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது. திராவிடநாடு ஒரு கூட்டாட்சியாக இருக்கும். (Federation) ஆந்திர மாகாணம், சுயாட்சியுடன் இருக்கும், தமிழகமும் அவ்விதமே, கேரளமும் அப்படியே. இவையாவும், திராவிடக்கூட்டாசியிலே, சேரும், சமஉரிமையுடன்—என்று பெரியார் கூறியிருக்கிறார். ஆந்திரரின் தனி மாகாணக்கோரிக்கையை ஆதரித்து, அந்த மாகாண சுயாட்சிக்குப் பங்கம் வராதபடி பாதுகாத்துக்கொள்ளும் உரிமை ஆந்திரருக்கு உண்டு என்பதையும் ஆதரித்தே வந்திருக்கிறது திராவிடர் கழகம். ஆந்திரநாடும், தமிழகமும் கேரளமும், வடநாட்டு மத்யஅரசாங்கஅமைப்பிலே சிக்கிச் சீரழியாமலிருக்க, இனத்தாலும் கலைப்பண்பாலும், பழக்கவழக்கங்களின் அடிப்படைக் கொள்கையாலும் ஒன்றாக உள்ள இம்மூன்று மண்டிலங்களும் ஒரு கூட்டாட்சி அமைத்துக் கொண்டு, பார்ப்பனர்—பரங்கி—பனியா என்னும் அச்சுஅமைப்பினிடமிருந்து விடுபடும் வழி வகுத்துக்கொள்ள வேண்டும் என்பதையே திராவிடத்தலைவர் கூறி வந்திருக்கிறார். இதனை மெயில் அறியும், அறிந்தும், ஆந்திரரை ஏவிவிடுவதுபோல எழுதுகிறது! ஏன்? சுயேச்சை பெற்ற திராவிடநாட்டிலே ஆந்திரருக்குமாகாண சுயாட்சி கிடைக்குமா என்பது தெரிவிக்கப்படவில்லை என்று துரைமகனார் தூபமிடுகிறார். இவருடைய அலுவலகத்திலே காணலாம் பெரியாரின் அறிக்கையை. ஆங்கிலத்திலே இருப்பதுதான், ஆகவே அவர் எளிதிலே புரிந்துகொள்ளலாம், புரிந்துகொள்ளவேண்டுமென்றஎண்ணம் இருந்தால்! திராவிடநாடு பரிபூரண சுயேச்சையுள்ள நாடாகும்,வைசிராய்க்கு வேலை இல்லை, கவர்னரோ பிறரோ மன்னர் பிரானின் சர்க்கார் பிரதிநிதியாக மட்டுமே இருப்பர்—என்று பெரியார் பேசினார், இதிலிருந்து திராவிடநாடு ஒரு குடியேற்ற நாடாக இருந்தால்போதும் என்று பெரியார் எண்ணுவதாகத் தெரிகிறது, என்று மெயில் எழுதுகிறது. இதுவிஷயமாகப் பலர் குழப்பத்திலே தாங்களும் இறங்கி மற்றவர்களையும்இழுக்கிறார்கள் என்பதை அறிந்துதான் அன்றையக் கூட்டத்திலே பெரியார், ஆங்கில ஆட்சியை அகற்றவேண்டிய பிரச்னையும் அதற்கான வேலைத்திட்டமும்தனிப்பிரச்னையாகக் கவனிக்கப்படும், அதைத்திராவிடநாடு தனிநாடு என்ற கோரிக்கையோடு போட்டுகுழப்பவேண்டாம். பிரிட்டிஷ் ஆட்சிக்கும், திராவிட நாட்டுக்கும் இடையே இருக்கவேண்டிய தொடர்பு, மற்ற நாடுகளுக்கும் நமக்கும் இருக்க வேண்டிய தொடர்பு என்னவிதம் என்பதுபற்றிய பிரச்னையைத் தனியாகக் கவனிக்கத் திட்டம் உண்டு. இப்போதுள்ள நிலைமைப்படி—அதாவது இந்தியா பிரிட்டிஷ்பிடியிலே இருக்கிற இதே நிலைமையின்படி பார்க்கும் போது, உடனடியாக எங்களுக்குத் தேவை, திராவிடநாட்டுக்குஎல்லைவகுக்க வேண்டும் என்பதும், மத்ய அரசாங்கப் பிணைப்பிலிருந்து திராவிடநாட்டை நீக்கி விடவேண்டும் என்பதும், பிரிட்டிஷ் தொடர்பின் அறிகுறியாகக் கவர்னரும், சீமையிலே இந்தியா மந்திரியும் இருந்தால்போதும், வைசிராயின் பிடி வேண்டியதில்லை என்பதுமாகும் என்று கூறினார். இதனால், ஆங்கில ஆட்சியிலேயே திராவிடநாடு இருக்கவேண்டும் என்பதல்ல. இந்தியப்பிணைப்பிலிருந்து விடுபட வேண்டும் உடனே, இந்தியாவின் மற்ற நாடுகள் எப்படிப்பிரிட்டிஷ் பிடியிலிருந்துவிடுபட வழிவகை வகுத்துக்கொள்ளுமோ அதே போலத் திராவிடநாடும். பிரிட்டிஷ் பிடியிலிருந்து விலகிட வழி செய்து கொள்ளும், என்று தெளிவாக்கினார். திராவிடர்கழகமென்று புதிய பெயருடன் இன்றுள்ள கட்சிக்கு ஜஸ்டிஸ் கட்சி என்று பெயர் இருந்தபோது நடைபெற்ற (சென்னை) மாநாட்டிலே, அதற்குமுன்பு குடியேற்றநாட்டுஅந்தஸ்து கோரிக்கையே கட்சியின் நோக்கம்என்று இருந்ததை மாற்றி, பூரணசுயேச்சை (Complete Independence) தேவை என்று தீர்மானம் செய்யப்பட்டிருக்கிறது. திராவிடர் கழகம், அந்தத் தீர்மானத்தின்படி, உடனடியாக எல்லை வகுக்கப்பட்டு, மத்ய அரசாங்கத் தொல்லை நீக்கப்பட்டதும், பூரணசுயேச்சை பெறுவதற்குத்திட்டம் தயாரித்தே தீரும். என்றென்றும் குடி ஏற்றநாடாக இருக்கத் திராவிடர் கழகம் சம்மதிக்காது,

நாட்டின் பாதுகாப்புப் பிரச்னை பற்றியும், மற்ற நாடுகளுடன் தொடர்பு எப்படி இருக்கவேண்டும் என்பது பற்றியும், பெரியாரும் பேசவில்லை, மற்றப் பேச்சாளரும கூறவில்லை, என்று,மெயில் எழுதுகிறது. அதாவது அந்தப் பிரச்னைகள் விஷயமாகப் பெரியாரும் அவரைச் சார்ந்தவர்களும், ஏதும்றியாதவர்கள் என்று எளனம் செய்கிறார், பல நாடுகளுக்குப் பாதுகாப்பு அளித்துப் பழக்கப்பட்டு, பழக்கம் காரணமாக, அந்த நாடுகளை விட்டுப் பிரிய மனமின்றி இருக்கும் பிரிட்டிஷாரின் பிரதிநிதிஎன்ற முறையிலே!

இந்தியாவின், மற்றப் பகுதிகளிலிருந்து திராவிட நாட்டுக்குள் வரவிரும்புவோர் அனுமதிச் சீட்டுப் பெறவேண்டும், வெளியே இருந்துவரும் சரக்குகள் மீது வரி விதிக்கப்படும் என்று, அன்று பேசினார் பெரியார் என்றுமெயில் ஆசிரியரே கூறுகிறார். இதேபோக்குத்தானே, எந்த வெளிநாட்டுடனும் இருக்கும்! இதை விளக்க வேண்டியது அவசியமா? பனியாவின் சரக்கு நம்மைப் பாழ்படுத்தும், ஆகவே அதனைத் தடுக்கவேண்டும் என்றால், அதுபோலத்தானே சுரண்டவரும் எந்த வெளிநாட்டுக்காரரும் தடுக்கப்படுவார்கள். திராவிட நாடு மற்ற நாடுகளுடன் தோழமையாக இருக்கும், அடிமையாக இராது! சுயேச்சை பெற்ற எந்த நாடும், தனது நலனையும், உலகப் பொது நலனையும் உள்ளத்திலிருத்தித் தானே மற்ற நாடுகளுடன் தொடர்பு எவ்வண்ணம் இருக்கவேண்டுமென்பதை அவ்வப்போது ஏற்படும் நிலைமைக்குத் தக்கபடி அமைத்துக்கொள்ளும். அதே போலவே திராவிட நாடும், அவ்வப்போது ஏற்படும் நிலைமைக்குத் தக்கபடி, மற்றநாடுகளுடன் எவ்வண்ணம்தொடர்பு இருக்கவேண்டுமென்பதைத் தீர்மானித்துக்கொள்ளும்; இது தெரியாதா மெயிலுக்கு!

(2-ம் பக்கம் பார்க்க)

Edited Printed and Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press, 317—319 Hodgsonpet Conjeeveram